பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
30 03 2025 **SUNDAY** 6 30 **PM**

வணக்கம் - மாநிலச் செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. கோடை விடுமுறையை மாணவர்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

2. கூட்டுறவு மற்றும் வேளாண்துறை இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சியை கண்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பான அச்சங்களை களையும் வகையில் மத்திய அரசு உறுதியான பதிலை வழங்க வேண்டும் என்று மாநில அமைச்சர் திரு. சிவசங்கர் வலியுறுத்தியுள்ளார்.

4. தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான கூட்டணி குறித்து தேசிய தலைமை உரிய நேரத்தில்முடிவெடுக்கும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

5. ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Udit** மற்றும் **Deepak Puniya** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

**>>>>>><<<<<<**

கோடை விடுமுறையை மாணவர்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மன்கிபாத் நிகழ்ச்சியில் அவர் இக்கோரிக்கையை விடுத்தார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (1) 71 செகண்ட்ஸ்)

ஜவுளிக் கழிவுகள் மறுசுழற்சி செய்யப்படுவதன் அவசியத்தை வலியுறுத்திய பிரதமர், ஜவுளிக்கழிவு மேலாண்மையில் திருப்பூர் நகரம் ஆற்றிவரும் பணி பாராட்டத்தக்கது என்றார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (2) 60 செகண்ட்ஸ்)

இதற்கிடையே, பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஜவுளிக் கழிவு மேலாண்மையில் திருப்பூர் நகரத்தின் பணிகளை பாராட்டிப் பேசியிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று திருப்பூர் சாய ஆலை உரிமையாளர்கள் சங்கத் தலைவர் திரு. காந்திராஜன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - காந்திராஜன் 47 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், கூட்டுறவு மற்றும் வேளாண்துறை இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சியை கண்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

பாட்னாவில் கூட்டுறவு மாநாட்டின் தொடக்க விழாவில் பங்கேற்று அவர் பேசினார்.

கூட்டுறவுத்துறைக்கென தனி அமைச்சகத்தை பிஜேபி அரசு தான் ஏற்படுத்தியிருப்பதாக அவர் கூறினார்.

விவசாயிகளின் நலனுக்காக மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களையும் திரு. அமித் ஷா பட்டியலிட்டார்.

>>>>>><<<<<<

மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பான அச்சங்களை களையும் வகையில் மத்திய அரசு உறுதியான பதிலை வழங்க வேண்டும் என்று மாநில அமைச்சர் திரு. சிவசங்கர் வலியுறுத்தியுள்ளார்.

அரியலூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தொகுதி மறுசீரமைப்பு பணிகள் காரணமாக, தமிழகத்தில் உள்ள தொகுதிகளின் எண்ணிக்கை குறையாது என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும், வடமாநிலங்களில் பிரதிநிதித்துவம் அதிகரிக்காது என்று திரு. அமித் ஷா குறிப்பிடவில்லை என்று அவர் கூறினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இதுகுறித்து கருத்து தெரிவிக்க வேண்டும் என்றும் திரு. சிவசங்கர் வலியுறுத்தினார்.

>>>>>><<<<<<

தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான கூட்டணி குறித்து தேசிய தலைமை உரிய நேரத்தில் அறிவிக்கும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை கூறியுள்ளார்.

இன்று கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேசிய தலைமை எடுக்கும் முடிவு, தமிழகம் மற்றும் பிஜேபியின் வளர்ச்சிக்கு அடிப்படையாக இருக்கும் என்று குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் திமுக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. முத்தரசன் வலியுறுத்தியுள்ளார்.

தருமபுரியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தினந்தோறும் செயின் பறிப்பு மற்றும் கொலைச் சம்பவங்கள் நடைபெறுவதாக கூறியுள்ளார்.

சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் கூடுதலாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் திரு. முத்தரசன் கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<<

அரசு பள்ளிகளில் தமிழாசிரியர் பணியிடங்களை, திமுக அரசு உடனடியாக ஏற்படுத்த வேண்டுமென்று பாமக நிறுவனர் மருத்துவர் ச. ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழை முதன்மை பாடமாக தேர்வு செய்து, இளநிலை, முதுநிலை மற்றும் முனைவர் பட்டங்களை பெற்ற 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வேலைவாய்ப்பின்றி உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தமிழக அரசு கடைபிடித்து வரும் தமிழ்மொழிக்கு எதிரான கொள்கைகள் தான் இதற்கு காரணம் என்று திரு. ராமதாசு குறை கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

கள்ளகுறிச்சி மாவட்டத்தில் 12ஆம் வகுப்பு படித்த ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டு நிகழ்ச்சி, ஆட்சியர் திரு. பிரசாந்த் தலைமையில் நடைபெற்றது.

>>>>>><<<<<<

வேலூர் மாவட்டம், அடுக்கம் பாறையில் உள்ள அரசு தலைமை மருத்துவமனையில் முதியோர் பயன்பெறும் வகையில் இயற்கைப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள திற்பரப்பு அருவியில் வார விடுமுறையை ஒட்டி ஏராளமான சுற்றுலாப் பயணிகள் இன்று நீராடி மகிழ்ந்தனர்.

>>>>>><<<<<<

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவிலில் கோடை விடுமுறையை முன்னிட்டு ஞாயிறு, செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் சிறப்பு தரிசன அனுமதி இல்லை என்று கோவில் இணை ஆணையர் திரு. ஞானசேகரன் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Udit** மற்றும் **Deepak Puniya** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 61 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் **Udit** சீனாவின் **Wanhao Zou -**வை வென்றார்.

ஆடவர் 92 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் **Deepak Puniya** ஜப்பானின் **Ishiguro**–வை வென்றார்.

>>>>>><<<<<<

அஹமதாபாத் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Aryan Shah** பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் 6-1, 6-3 என்ற செட்கணக்கில் இங்கிலாந்தின் **Jay Clarke**—வை வென்றார்.

>>>>>><<<<<<

ஆஸ்திரேலிய ஓப்பன் படகு போட்டியில் இந்திய ராணுவ அணி, 4 தங்கம், 4 வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>>><<<<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் தற்போது விசாகப்பட்டிணத்தில் நடைபெற்று வரும் ஆட்டத்தில் தில்லி அணி வெற்றிபெற 164 ரன் என்ற இலக்கினை ஹைதராபாத் அணி நிர்ணயித்துள்ளது.

>>>>>>**END**<<<<<<